**செய்தி வெளியீடு எண்.15** **நாள் .27.01.2021**

**பத்திரிகைச் செய்தி**

அரசாரணை நிலை எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவுத் (சந8(1)) திட்டத்துறை நாள்.28.12.2020-ன்படி தமிழ்நாடு அரசு சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் சென்னை மாவட்டத்தில் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு 9 ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க (Counselling) ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளி நகலுடன் 08.02.2021 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்கள் வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்கள் கொண்ட தேர்வுக்குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் (ஒரு வருடத்தில் 70 நாட்களுக்கு மிகாமல் வாரம் ஒரு முறை) மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்கப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

| | | |
|---|---|---|
| **பணியிடங்கள்** | : | 9 |
| **தகுதி** | : | உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் |
| **தொகுப்பூதியம்** | : | (ஒரு வருடத்தில் 70 நாட்களுக்கு மிகாமல் வாரம் ஒரு முறை) மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) |
| **விண்ணப்பங்கள் பெற மற்றும் அனுப்ப முகவரி** | : | கண்காணிப்பாளர்,<br>சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம்,<br>எண்.58, சூரிய நாராயண சாலை,<br>இராயபுரம், சென்னை-13.<br>தொலைப்பேசி எண். 8903625675 / 044- 25952450. |

**குறிப்பு:** விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 08.02.2021

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01